1972 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : யார் யார் அதற்குப் பதிவு செய்து கொள்வதற்கு 'குவாலிஃபைட்' பொருத்தமுடையவர்களோ, அவர்கள் பதிவு செய்யலாம். குடும்பத்தில் சிலர் வேலைகள் அல்லது வேறு தொழிலில் இருக்கிறார்கள் என்பதற்காகத் தடை செய்ய முடியாது.

காஞ்சிபுரத்தில் கைவினைப் பொருள்கள் கூட்டுறவு விற்பனைக் கிளைச்சங்கம்

*904 **வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காஞ்சிபுரத்தில் 1970-ம் ஆண்டு, தமிழ்நாடு கைவினைப்பொருள்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கச் சார்பில் ஒரு கிளை விற்பனை நிலையம் தொடங்கப் பட்டதா ?

(இ) ஆம் எனில், அது லாபத்தில் நடக்கிறதா ? நஷ்டத்தில் நடக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) காஞ்சிபுரத்தில் 9-9-1969 அன்று தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில் ஒரு கிளை விற்பனை நிலையம் துவங்கப்பட்டது.

(இ) இக் கிளை விற்பனை நிலையம் நட்டத்தில் நடந்தால் 6-8-1971 அன்று மூடப்பட்டது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்படி கைவினைப் பொருள்கள் விற்பனை நிலையங்கள் சரியாக நிர்வகிக்கப்படாத காரணத்தால் நஷ்டத்தில் நடக்கின்றன. ஆகவே, விற்பனைக்குத் தகுந்தமுறையில் சரியானமுறையில் விற்பனை செய்யும் நபர்களை ஏற்படுத்துவதோடு இப்படி நஷ்டம் ஏற்படுவதற்குக் காரணங்கள் என்ன என்பதற்கு வியாபார நிபுணர் குழு வைத்து ஆராய்ச்சி செய்து கைவினைப் பொருள்கள் நசித்துப் போகாமல் பாதுகாப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விற்பனை ஆகாமல் இருப்பதற்கு ஆராய்ச்சி தேவையில்லை. நாட்டிலே சந்தை இல்லை என்பதை நாம் தெளிவாகக் கண்டுவிடலாம். ஆனாலும் இந்தக் கைவினைத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நம்முடைய அரசாங்கம் புதிய திட்டத்தை, மாவட்டந்தோறும் எம்போரியம் அமைத்து அதன்மூலம் வெளி மாநிலங்களுக்கும், வெளி நாட்டிற்கும் விற்பனை செய்து கொடுப்பதற்கான புதிய முயற்சி பற்றி சிந்தித்து வருகிறோம்.